*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(1), 2020*

# ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்களும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளும்

**எம்.பி. சப்னா சக்கி & எம்.எம். பாசில்**
**அரசியல் விஞ்ஞானத்துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: safnasakee@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

*2019 ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் கிழக்கில் முக்கிய நகரமாக விளங்கும் மட்டக்களப்பிலும் மிகவும் ஒருங்கிணைந்த அடிப்படையிலும் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான காரணம் தொடர்பில் பல்வேறு கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்துள்ளன. இலங்கை முஸ்லிம்களின் அரபுமயமாக்கலை இத்தாக்கு தலுக்கான காரணமாக அடையாளப்படுத்தியுள்ளனர். இதுதவிர பல சமூக, அரசியல் மற்றும் கலாசார காரணிகளும் குறிப்பிடப்படுகின்றன. யுத்தத்திற்கு பிந்திய இலங்கையின் முக்கிய போக்குகளில் ஒன்றாக இஸ்லாமோபோபியா அடையாளப்படுத்தப்படுகின்றது. தீவிர சிங்கள-பௌத்த குழுக்களினால் இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் இஸ்லாமிய எதிர்ப்புவாத சொற்பிரயோகங்கள் என்பன அரசியல் தரப்பினரின் மறைமுகமான ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2012ஆம் ஆண்டு தம்புல்ல பள்ளிவாயல் மீதான தாக்குதல் முதல் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பல உயர் வழக்குச் சம்பவங்கள் பதிவாகியிருந்த போதிலும் அவை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் குறைந்தளவிலான கவனத்தையே பெற்றிருந்தன. இக்காலப்பகுதியில் வெளிவந்த அறிக்கைகளின் பிரகாரம் சிறுபான்மை வழிபாட்டுத் தலங்கள் மீது 65 தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. இவை பொதுபலசேனா என்ற தீவிர சிங்கள-பௌத்த அமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த வெறுப்புப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகவே நோக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக 2014ஆம் ஆண்டில் அலுத்கம, பேருவளை, தர்காநகர், தெஹிவளை போன்ற பகுதிகளில் முஸ்லிம் வணிகத்தலங்கள் மீதான தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இவற்றைத் தொடர்ந்தே 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. இத்தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களாக தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் உறுப்பினர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் இஸ்லாமிய அரசு அதற்கான பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டுள்ளது. தாக்குதல்களுடன் முஸ்லிம்களில் சிறுபகுதியினர் தொடர்புபட்டிருப்பதன் காரணமாக தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். அந்நெருக்கடிகளை ஆராய்கின்ற வகையில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரையானது ஈஸ்டர் தின தாக்குதல்கள், அதற்கான பின்னணி, கிறிஸ்தவ தேவாலயங்கள் இலக்குவைக்கபட்டதற்கான காரணங்கள் என்பன தொடர்பிலும் ஆராய்கின்றது. இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகள் முன்னர் வெளியிடப்பட்ட பல்வேறு கட்டுரைகள் மற்றும் ஆவணங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். .*

**பிரதான சொற்கள்:** இலங்கை முஸ்லிம்கள், இஸ்லாமோபோபியா, ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்கள், தேசிய தௌஹீத் ஜமாஅத், பொதுபலசேனா

## 1. அறிமுகம்

இலங்கை பல்லின மத சமூகக் கட்டமைப்பைக் கொண்ட நாடாகும். இங்கு பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என பல மதத்தினரும் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு பௌத்தர்கள் பெரும்பான்மையினராகவும் ஏனையவர்கள் சிறுபான்மையினராகவும் உள்ளனர். இவர்களுள் முஸ்லிம்களை பொறுத்தவரையில் அவர்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவர்களாக உள்ளனர். இவர்கள் மொத்த சனத்தொகையில் 9 வீதத்தினராக உள்ளனர். இந்திய மற்றும் உள்ளூர் பெண்களை திருமணமுடித்த இந்திய வர்த்தகர்களிடமிருந்தும் தென்கிழக்காசிய மலாயர்களிடமிருந்தும் காலனித்துவவாதிகளால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவர்களாவர். இலங்கை முஸ்லிம்களுள் பெரும்பாலானவர்கள் சுன்னி முஸ்லிம்களாக உள்ளனர். மிகுதிப்பேர் சீயாக்களாகவும் அஹமதியர்களாகவும் உள்ளனர். அண்மைக்காலங்களில் முஸ்லிம்களிடையே வளர்ந்துவரும் மத ஈடுபாடு தப்லீக் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமியா போன்ற கொள்கைகளின் செல்வாக்கிற்கு வழிவிட்டுள்ளது.

சுதந்திரத்திற்கு முன்னரான தேசியவாத போராட்டங்களில் முஸ்லிம் அரசியல் உயர்குழாமினர் அரபு வம்சாவளி மற்றும் இஸ்லாம் மதத்தின் அடிப்படையிலான தனியான மூர் அடையாளத்திற்காக வாதிட்டனர். இவர்களது வாதத்தை பிரித்தானிய காலனித்துவவாதிகள் ஏற்றுக்கொண்டு இலங்கை முஸ்லிம்கள், இந்திய முஸ்லிம்கள், மலாயர்கள் என்ற அடையாளத்தை உருவாக்கி சட்டபூர்வமாக்கினர். இவர்கள் ஆரம்ப காலத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்ததுடன் காலப்போக்கில் நாட்டின் உள்நாட்டுப் பகுதிகளுக்கும் பரவலடைந்துள்ளனர். அதன்படி வடக்கு கிழக்கு தவிர்ந்த பெரும்பான்மையோர் செறிந்து வாழும் ஏனைய பகுதிகளில் சிதறிக் காணப்படுகின்ற அதேவேளை வடக்கு கிழக்கு பகுதிகளில் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். மக்கள் தொகை கணக்கெடுப்பு அரசியல்மயமாக்கப்பட்ட ஒரு சூழலில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அங்கு அவர்கள் மொத்த மக்கள் தொகையில் 41.6% ஆக உள்ளனர் (Department of Census and Statistics–Sri Lanka, 2007). திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் உள்ளிட்ட வடகிழக்கு மாகாணங்களில் 1/5 பகுதியினராக உள்ளனர். இதுதவிர கொழும்பு, களுத்துறை, புத்தளம், கண்டி உள்ளிட்ட பகுதிகளிலும் செறிவாக வாழ்ந்து வருகின்றனர் (Mayilvaganan, 2008). வரலாற்று ரீதியாக வடகிழக்கு முஸ்லிம்கள் மற்றும் தெற்கு முஸ்லிம்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. தெற்கு முஸ்லிம்கள் அரசியல் மற்றும் வர்த்தகத்தில் பலமானவர்களாகவும் கிழக்கு முஸ்லிம்கள் பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் அரசியல் ஈடுபாடு பெரும்பாலும் 1980களின் பின்னரே எழுச்சி கண்டது. குறிப்பாக எம்.எச்.எம். அஸ்ரப் தலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றதைத் தொடர்ந்து ஆரம்பமானது எனலாம்.

இலங்கை உள்ளக முரண்பாட்டின் ஆரம்ப காலங்களில் வட-கிழக்கு முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் (1/3) தமிழ் ஆயுதக்குழுக்களுக்கு ஆதரவளித்தனர். எனினும் தென் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கு வழங்கிய அரசியல் ஆதரவு முஸ்லிம்கள், தமிழ் ஆயுதக்குழுவினரால் துரோகிகளாக கருதப்படுவதற்கு காரணமாக அமைந்தது. இதனால் தமிழ் ஆயுதக்குழுக்கள் முஸ்லிம்களுக்கு எதிரான அட்டூழியங்களை முன்னெடுத்தனர். அந்தவகையில் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காத்தான்குடி பள்ளிவாயல் மீது தாக்குதல் நடாத்தினர். இதில் 103பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து சில நாட்களில் ஏறாவூரில் தாக்குதல் நடாத்தினர். இதில் சுமார் 130பேர் கொல்லப்பட்டதுடன் அதே ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களை வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றி இருந்தனர் (Mihlar, 2019).

மேலும் உள்ளக முரண்பாடு தீவிரமடைந்த போது பெருமளவிலான முஸ்லிம்கள் அதிலிருந்து ஒதுங்கி நின்றதனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் பங்கேற்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த்திருந்தனர். அத்துடன் பொருளாதார மற்றும் நில வளங்களை கட்டுப்படுத்துவதற்காக தமிழர்களுடன் போட்டியிட்ட அவர்கள் தமது ஒற்றுமையை அதிகரிக்கும் ஒரு வழியாக மதத்தை நோக்கி திரும்பினர். இதன்போது இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழ் அல்லாத அடையாளத்தை உருவாக்குவதற்கு முற்பட்டனர். இதன்விளைவாக 1980களின் நடுப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக போராடும் இலங்கை அரச படைகளுடன் முறையான மற்றும் முறையற்ற தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த காலகட்டத்தில்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை கிழக்கு முஸ்லிம்கள் தமக்கான அடையாளமாக உருவாக்கிக் கொண்டனர் எனலாம்.

அதேவேளை நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் வசித்து வந்த முஸ்லிம்கள் பெரும்பான்மையான சிங்களவர்களால் ஓரங்கட்டப்பட்டிருந்தாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற ஒரு பிரத்தியேக முஸ்லிம் கட்சியை உருவாக்குவதற்கான விருப்பத்தை கொண்டிருக்கவில்லை. இவர்கள் சிங்களவர்களுடன் இணைந்து செயற்பட்டனர். சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமது தேவைகளுக்கு இடமளிக்கின்றன எனக் கருதினர். சிங்கள தலைமைகளால் பல வணிக சலுகைகள் மற்றும் அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டனர். அதன்படி குறிப்பிடத்தக்க அரசியல் மற்றும் மத சலுகைகளை வென்றுள்ளனர் என்பது உண்மையாகும். முஸ்லிம்களுக்கு அமைச்சர் பதவிகள், கலாசார சலுகைகள் என்பன கிடைக்கப்பெற்றன. மேலும் வர்த்தகம் மற்றும் வணிக நடவடிக்கைகளில் சிங்களவர்களுடனான முஸ்லிம்களின் நெருக்கமான தொடர்புகள், அரசியல், சமூக நலன்களைப் பெறுவதற்கான அரசியல் சந்தர்ப்பவாத தந்திரோபாயம் என்பன அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ததுடன் அவர்களின் வணிக நலன்களையும் பாதுகாத்தன. இத்தகைய சலுகைகள் முஸ்லிம் தலைவர்களை சிங்கள அரசியல் தலைவர்களின் பக்கம் சாய்த்திருந்தன.

சிங்கள ஆளும் வகுப்பினருடனான முஸ்லிம் தலைமைகளின் ஒத்துழைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேரம் பேசும் வல்லமை என்பன அடுத்தடுத்த அரசாங்கங்களில் முஸ்லிம்களுக்கான முக்கிய அமைச்சு இலாகாக்களை பெற்றுக் கொடுத்தன. இதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நலன்கள் தமது மதத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரத்தை உறுதி செய்த அதேவேளை தேசிய அபிவிருத்தியில் முஸ்லிம்களின் இணக்க ரீதியான பங்களிப்பையும் ஏற்படுத்தின. இதன்மூலம் பள்ளிவாயல்கள், மதரஸாக்கள் என்பன கட்டப்பட்டதுடன் ஹலால் உணவு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. வடகிழக்கிலுள்ள தமிழ் சமூகத்துடன் நேரடியான தொடர்பு கொண்ட முஸ்லிம்களைத் தவிர ஏனைய பெரும்பாலான முஸ்லிம்கள் மோதலிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தனர். அரபு கலாசாரம் மற்றும் மத அடையாளத்தில் வேரூன்றியுள்ள தமது நம்பிக்கைகளுக்கு அரச சலுகைகளை வரவேற்ற முஸ்லிம்களை குறிப்பாக வட கிழக்குக்கு வெளியிலுள்ளவர்களை சமாதானப்படுத்துவதன் மூலம் முஸ்லிம்களின் அடையாளம் ஒரு சமூக கலாசார மற்றும் மத கட்டமைப்பிற்குள் மேலும் ஒருங்கிணைக்கப்பட்டது. முஸ்லிம் தலைமைகளுக்கான அரச சலுகைகள் முஸ்லிம்களிடையே இஸ்லாமிய பழைமைவாத வடிவத்தின் எழுச்சிக்கு பங்களிப்பு செய்தன. அதேவேளை தமிழ் மற்றும் கத்தோலிக்க சிறுபான்மையினரும் அரச சலுகைகளை பெற்றுக் கொண்டனர். அவை பிரதானமாக அரசியல் ரீதியானவையாக காணப்பட முஸ்லிம் தலைமைகள் அரசிடமிருந்து பெற்ற சலுகைகள் முஸ்லிம் அடையாள உருவாக்கம் மற்றும் மதத்தளங்களுக்கு அதிகாரமளிப்பனவாக இருந்தன. இதனூடாக கொழும்பு உள்ளிட்ட, முஸ்லிம்கள் கணிசமாக வாழும் பகுதிகளில் 1983களுக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான மதரஸாக்கள் நிறுவப்பட்டன. பள்ளிவாயல்கள் மற்றும் மதரஸா கட்டிடங்களுக்கு நிலங்களை ஒதுக்குதல் போன்ற மத நலன்களை வழங்குவது தொடர்பான வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் முஸ்லிம் அரசியல் வாதிகள் முஸ்லிம் தொகுதிகளிலிருந்து வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

உள்ளூர் சிங்கள அதிகாரிகளின் எதிர்ப்பின்றி பள்ளிவாயல்கள் மற்றும் மதரஸாக் கட்டிடங்கள் என்பன கட்டப்பட்டு வந்தன. மதரஸாக்களைப் பொறுத்தவரையில் அவை அரபு மொழி மற்றும் இஸ்லாம் சமயம் ஆகிய இரண்டையும் கற்பிப்பதில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்துகின்றன.

மதரஸாக்களுக்கு புறம்பாக இலங்கையில் அரபுக் கல்லூரிகளும் தாபிக்கப்பட்டுள்ளன. தற்போது 205ற்கும் மேற்பட்ட மதரஸாக்கள் அரபுக் கல்லூரிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை கற்பித்தல் மற்றும் முகாமைத்துவத்தில் Dar's- e- Nizami இந்திய மதரஸா பாடத்திட்ட முறையை பின்பற்றுகிறார்கள் (Imtiyaz, 2019). இந்த கல்லூரிகள் இலங்கை முஸ்லிம் கலாசார விவகார சட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு முஸ்லிம்கள் பெற்றுக்கொள்ள வந்த சலுகைகளும் வாய்ப்புக்களும் ஏனைய சமூகத்தவர் மத்தியில் முஸ்லிம்கள் பற்றிய அச்சவுணர்வையும் வெறுப்புணர்வையும் ஏற்படுத்தின. சிங்கள-

பௌத்த தீவிர போக்காளர்கள் நிகாப், பள்ளிவாயல்கள், மதராஸாக்கள் போன்ற முஸ்லிம் சின்னங்களின் எழுச்சியை 'இலங்கையின் இஸ்லாமியமயமாக்கல்' என்று பார்க்க வந்தனர். இது முஸ்லிம் சமூகங்கள் மீது பல்வேறு வன்முறை தாக்குதல்கள் நடாத்தப்படுவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தன. அந்தவகையில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அலுத்கம, திகன, அம்பாறை சம்பவங்கள் பிரதானமானவையாகும். இத்தாக்குதல்களைத் தொடர்ந்தே 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்கள் கிறிஸ்தவ தேவலாயங்கள் மற்றும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களை இலக்குவைத்து நடாத்தப்பட்டன. இதன்மூலம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் சூழ்நிலையின் கைதிகளாக மாறினர். தாக்குதல்களுக்குள்ளான கிறிஸ்தவ சமூகம் அமைதி காத்திருந்த போதிலும் இந்த சந்தர்ப்பத்தை சிங்கள-பௌத்த தீவிரவாத போக்குடைய குழுக்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி, முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க வந்தனர். இதனால் ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம் சமூகம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். அந்நெருக்கடிகளை ஆராய்வதற்கு முன்னர் இக்கட்டுரையானது ஈஸ்டர் தின தாக்குதல்கள், அதற்கான பின்னணி, தாக்குதல்களுக்காக கிறிஸ்தவ தேவாலயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான காரணிகள் என்பன தொடர்பில் பின்வருமாறு ஆராய்கின்றது.

## 2. ஈஸ்டர் தின தாக்குதல்கள்

உள்நாட்டு சிவில் யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து இலங்கையில் இடம்பெற்ற மிகப்பெரிய தாக்குதலாக ஈஸ்டர் தின தாக்குதல்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. இத்தாக்குதல்கள் யாரும் எதிர்பாராத விதமாக 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 8.45க்கும் 9.05க்கும் இடைப்பட்ட நேரத்திலும் மதியம் 1.05 மற்றும் 2.25 மணியளவிலும் இலங்கையின் கொழும்பு மற்றும் ஏனைய கரையோரப் பகுதிகளிலுள்ள மூன்று தேவாலயங்கள், நான்கு நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் தெமட்டகொட வீட்டுத்தோட்டம் என்பவற்றிலும் நடாத்தப்பட்டன. இதில் 45 வெளிநாட்டவர் உள்ளடங்கலாக 259பேர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர் (The times of India, 2019).

தாக்குதல்களை தொடர்ந்து இலங்கை புலனாய்வுப் பிரிவினர் அது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அதற்கான சூத்திரதாரிகளையும் அடையாளங்கண்டனர். அதன்படி தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பைச் சேர்ந்த மொஹமட் சஹ்ரான் (Mohammed Zahran) அல்லது சஹ்ரான் ஹாசிமி (Zahran Hashmi) என்பவரின் தலைமையில் குறித்த தாக்குதல்கள் நடாத்தப்பட்டதாக இலங்கை அதிகாரிகள் கண்டறிந்தனர். மொஹமட் சஹ்ரான் என்பவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தீவிர உரைகள் நிகழ்த்தி வருவதாக முஸ்லிம் தலைவர்களினால் அறியப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் இணைந்து தாக்குதல்களில் ஈடுபட்ட ஏனைய எட்டு குண்டுதாரிகளும் கூட இலங்கை முஸ்லிம்கள் எனவும் இவர்கள் அனைவரும் திட்டமிட்ட அடிப்படைகளில் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர் எனவும் விசாரணைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவர்களில் தேசிய தௌஹீத் ஜமாஅத் தலைவரான 34 வயதுடைய மொஹமட் சஹ்ரான் என்பவர் இலங்கையின் வணிக வியாபாரியின் மகனான 31 வயதுடைய இல்ஹாம் இப்றாஹிம் (Ilham Ibrahim) என்பவருடன் இணைந்து சங்கரில்லா ஹோட்டலில் தாக்குதல் நடாத்தினார் எனவும் இல்ஹாமின் மூத்த சகோதரரான இன்சாப் இப்றாஹிம் (Inshaf Ibrahim) சினமன் கிரேன்ட் ஹோட்டலில் குண்டை வெடிக்கச்செய்தார் எனவும் அறியப்பட்டது. மேலும் மொஹமட் அசாம் மொஹமட் முபாரக் (Mohamed Azaam Mohamed Mubarak) கொழும்பு கிங்ஸ்பெரி நட்சத்திர விடுதியிலும் அச்சி முகம்மது மொஹமட் ஹஸ்துன் (Achchi Muhammadu Mohamed Hasthun) என்பவர் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியன் தேவாலயத்திலும் மொஹமட் நாசர் மொஹமட் அசாத் (Mohamad Nazar Mohamed Aazath) மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திலும் அலாவுதீன் அஹமட் முவாத் (Alwudeen Ahamed Muaath) கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியர் தேவாலயத்திலும் குண்டை வெடிக்கச் செய்தனர் என உறுதிப்படுத்தப்பட்டது (Amarasingham, 2019). முதற்கட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து சுமார் 5 மணி நேரத்திற்குப் பின்னர் மதியம் 1.05 மணியளவில் அப்துல் லதீப் ஜமீல் மொஹமட் (Abdul Lathief Jameel

Mohamed) என்பவர் தெஹிவளை ட்ரொபிகல் ஹோட்டலில் மற்றுமொரு குண்டை வெடிக்கச் செய்தார். அதனையடுத்து 2.25 மணியளவில் தெமட்டகொட வீடொன்றிலும் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இலங்கை காவல்துறையின் கூற்றுப்படி தெமட்டகொட தாக்குதல் இன்சாப் இப்றாஹிமின் மனைவியான பாத்திமா இப்றாஹிமால் நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதலில் 3 STF அலுவலர்களும் பாத்திமா இப்றாஹிமின் 3 குழந்தைகளும் காவு கொள்ளப்பட்டனர் (Amarasingham, 2019).

தாக்குதல்களுக்கு அடுத்த நாள் இலங்கை அரசியல்வாதிகளில் சிலர் குறித்த தாக்குதல் தொடர்பில் 2019 ஏப்ரல் மாத தொடக்கத்தில் இந்திய உளவுத்துறையினர் எச்சரிக்கை அறிக்கையொன்றை விடுத்திருந்ததாகவும் அதனை இலங்கை அரசாங்கத்தரப்பினர் பொருட்படுத்தவில்லை எனவும் குற்றஞ்சாட்டினர். மேலும், குறித்த அறிக்கையில் சஹ்ரான் ஹாசிமி என்ற பெயர் மட்டுமல்லாது அவர் பிரபல கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் மீது தாக்குதல் நடாத்தவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர். இது தொடர்பில் அரசாங்கத்தரப்பினர் புலனாய்வு பிரிவினரின் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை தாக்குதல்கள் இடம்பெற்று இரண்டு நாட்களின் பின்னர் இஸ்லாமிய அரசு (IS) தமது அமக் செய்தி முகவர் மூலம் (Amaq news agency) தாக்குதலுக்கான பொறுப்பினை ஏற்றுக் கொண்டதுடன் (Winsor & Jovanovic, 2019) இத்தாக்குதலை அமெரிக்க தலைமையிலான கூட்டணியின் உறுப்பினர்களையும் இலங்கையிலுள்ள கிறிஸ்தவர்களையும் இலக்கு வைத்து நடாத்தியதாக குறிப்பிட்டிருந்தனர் (BBC, 2019). மேலும் இஸ்லாமிய அரசுத் தலைவர் அபூபக்கர் அல்பக்தாதிக்கு விசுவாசமாக இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் தாக்குதல் நடாத்தியவர்கள் ஒரு வரிசையில் நிற்கும் படியமைந்த புகைப்படமும் 59 விநாடிகளைக் கொண்ட காணொலி ஒன்றும் வெளியிடப்பட்டன. குறித்த புகைப்படம் மற்றும் காணொலியில் சஹ்ரான் ஹாசிமியின் முகத்தை தவிர ஏனையவர்களின் முகங்கள் மறைக்கப்பட்டிருந்தன. இதனை ஆதாரமாகக் கொண்டு தாக்குதல்களை நடாத்தியவர்கள் இஸ்லாமிய அரசுடன் தொடர்புடையவர்கள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இவ்வாறு IS அமைப்பு தாக்குதல்களுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்ட போதிலும் அது நன்கு தெளிவுபடுத்தப்படவில்லை என்ற கருத்து ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. வெளிநாட்டு போராளிகள் உள்ளூர் குண்டுதாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்களா? நிதியுதவியளித்தார்களா? வழிநடாத்தினார்களா? என்பன தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளதுடன் அவை தொடர்பில் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

மேலும் இத்தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் சஹ்ரான் ஹாசிம் என்பவரின் தலைமையிலான தேசிய தௌஹீத் ஜமாஅத் மற்றும் ஜமாத்து மில்லதீ இப்ராஹிம், விலாயத் அஸ் செய்லானி என்ற இயக்கங்களைச் சார்ந்தவர்கள் என அடையாளங்காணப்பட்டு, குறித்த அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளன. அதேவேளை தாக்குதல்களுக்கான பின்னணியை அறிவதற்காகவும் இந்த தாக்குதல் தொடர்பான முழுமையான விசாரணையை மேற்கொள்வதற்காகவும் நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு அதன் அறிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்றுவரை இத்தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதில் கைது செய்யப்பட்டவர்கள் மாத்திரமன்றி குண்டு வெடிப்பின் போது பதவியிலிருந்த ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு பிரிவினர் உள்ளிட்டோரும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### 3. ஈஸ்டர் தின தாக்குதல்களுக்கான பின்னணி

அரசியல் வன்முறை என்பது பெரும்பாலும் சமூக-பொருளாதார பதட்டங்களின் விளைவாகும். காலனித்துவத்திற்கு பிந்திய சமூகங்களில் ஏற்பட்ட பல பிளவுகளையும் பதட்டங்களையும் கருத்திற் கொள்கின்ற போது இப்பதட்டங்களை கையாள்வதற்கான வழிமுறையாக அரசியல் வன்முறை வெடிக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஏனெனில் பல சந்தர்ப்பங்களில் அரசியல்

தலைவர்கள்/உயர்குழாமினர் அல்லது அவர்களது ஆதரவாளர்கள் மற்றவர்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரங்களினூடாக இனப்பிளவுகளை தூண்டி, அதன் மூலம் மக்கள் ஆதரவினையும் தமது நிலையையும் வலுப்படுத்த முடியும் என்று நம்புகின்றனர். இன அல்லது மத வெறுப்புப் பிரச்சாரங்கள் தமது அதிகாரத்தை விரிவுபடுத்தவும் வென்றெடுக்கவும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். சில சமயங்களில் அரசியல் தலைவர்கள் தேர்தல் அரசியலில் தமது ஆதரவாளர்களை வன்முறையை அல்லது படுகொலைகளை அல்லது இனஅழிப்பை அல்லது இன பதட்டங்களை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கின்றனர். தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளை கைப்பற்றுவதற்கான உத்திகளுள் ஒன்றாக இன ரீதியில் எதிரிகளை விரட்டுவது காணப்படுகின்றது. இந்தச் செயன்முறை இனப்பிரிவுகளினூடான அரசியல் முறைமையின் துருவமயமாதலுக்கும் அரசியல் வன்முறைக்கும் அடிப்படையாக அமைகின்றது. இதன்மூலம் சிறுபான்மையினர் பாதிக்கப்படுவதுடன் இடம்பெயர்வுக்கும் உட்படுகின்றனர்.

எனவேதான் இத்தகைய பின்புலத்தில் நின்று நோக்குகின்ற போது "ஈஸ்டர் தின தாக்குதல்களை தொடர குறிப்பிட்ட சில பெயரளவிலான முஸ்லிம்களை தூண்டியது எது?" என்ற கேள்வியை எழுப்புகின்ற சந்தர்ப்பத்தில் நாட்டில் அதிகரித்துவரும் முஸ்லிம் விரோத பிரச்சாரங்கள் சில படித்த இளைஞர்களை விருப்பத்துடன் தற்கொலை குண்டுதாரிகளாக மாற்றியிருக்கலாமா? என சிந்திக்கத் தூண்டுகின்றது. மே 2009இல் இலங்கையின் சிவில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட முக்கிய போக்குகளில் ஒன்று பொதுபலசேனா போன்ற சிங்கள-பௌத்த தீவிரவாதப்போக்குடைய குழுக்களின் முஸ்லிம் எதிர்ப்பு செயற்பாடுகள் பரந்தளவில் ஆரம்பிக்கப்பட்டமையாகும். அதன்படி முஸ்லிம் எதிர்ப்புப்பிரச்சாரங்கள் இலத்திரனியல், நேரடி என பல்வேறு வடிவங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி, மதமாற்று நடவடிக்கைகள், பொருளாதார மேம்பாடு என்பவற்றின் மூலம் இலங்கையை கையகப்படுத்த திட்டமிட்டுள்ளனர் எனக்கூறி முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரங்களை ஆரம்பித்தனர் (Imtiaz, Subedi & Sarvananthan, 2019). இதனடிப்படையில் முஸ்லிம்களை பாதிக்கும் வகையில் முஸ்லிம் நிறுவனங்கள், ஹலால் தயாரிப்புகள், பெண்களின் கலாசார ஆடைகள் ஆகியவற்றை புறக்கணித்தல், முஸ்லிம்களுக்கு சொந்தமான சில்லறை விற்பனை நிலையங்களுக்கு எதிராக எதிர்ப்புக்களைக் காட்டுதல் போன்ற செயற்பாடுகள் நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்றதைக் குறிப்பிடலாம். குறிப்பாக நாட்டின் தென் பகுதியிலுள்ள அலுத்கமயில் மூன்று நாட்கள் வன்முறைகள் இடம்பெற்று அதில் மூன்று பேர் உயிரிழந்ததுடன் 78பேர் காயமடைந்தனர் (BBC, 2014). 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து 2017 வரையான காலப்பகுதிகளில் முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் ஒப்பீட்டு ரீதியில் முன்னரை விட வன்முறைச் சம்பவங்கள் குறைவடைந்திருந்தன.

இவ்வாறு ஆரம்பத்தில் தென் இலங்கையின் பல பகுதிகள் சிங்கள-பௌத்த தீவிரவாதக் குழுக்களின் முஸ்லிம் விரோத பிரச்சாரங்களின் இலக்குப் பகுதிகளாக இருந்த போதிலும் அண்மைக்காலங்களில் வட மேற்கு மாகாணம் கூட முஸ்லிம் எதிர்ப்பு செயற்பாட்டின் மையமாக இருந்து வருகின்றதை சுட்டிக்காட்டலாம். குறிப்பாக இப்பகுதிகளில் இறைவனை (அல்லாஹ்வை) பன்றியாக சித்தரிக்கும் பலகைகளை எடுத்துச் செல்லல், அல்லாஹ் எனக்குறிக்கப்பட்ட உருவ பொம்மையை எரித்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையை குறிப்பிடலாம் (Amarasingham, 2019). இச்செயற்பாடுகள் முஸ்லிம்களுக்கு ஆபத்தானவை மட்டுமன்றி இலங்கை முஸ்லிம்கள் கடைப்பிடித்து வரும் அடையாள உணர்வையும் மதிப்புக்களையும் கூட பெரிதும் பாதிக்கின்றன. அத்துடன் மார்ச் 2018இல் சிங்கள-பௌத்த தீவிரவாதிகளின் புதிய அலை தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவை இலங்கை முஸ்லிம்களிடையே பாதுகாப்பின்மை மற்றும் அச்ச உணர்வுகளை மேலும் அதிகரிக்கச் செய்தன. தீவிரப்போக்குடைய கும்பல்கள் முஸ்லிம்கள், அவர்களது சொத்துக்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்களை இலக்குவைத்து தாக்குதல்களை நடாத்தின. பெப்ரவரி 22இல் மத்திய மலைநாட்டின் கண்டி மாவட்டத்தில் சிங்கள லொறி(truck) ஓட்டுநர் மற்றும் முஸ்லிம் ஆண்கள் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பினால் வன்முறை அலை கிளம்பியதாக கூறப்படுகின்றது. குறித்த கைகலப்பினால் தாக்குதலுக்குள்ளான சிங்கள லொறி ஓட்டுநர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில்

சிகிச்சை பலனின்றி, சில நாட்களின் பின்னர் உயிரிழந்தார். அவர் உயிரிழந்த மறுநாளே சிங்கள கும்பல்கள் முஸ்லிம்களைத் தாக்கியதுடன் அவர்களது வீடுகள், கடைகள் மற்றும் வாகனங்களை கொழுத்தினர். அதன் பின்னர் வன்முறை ஏனைய மாவட்டங்களுக்கும் பரவியது (Amarasingham, 2019). இவ்வாறு 2012 முதல் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் இலங்கையின் அரசியலை துருவமயப்படுத்த உதவியதுடன் இலங்கை அரசு மற்றும் அதன் நிறுவனங்கள் மீதான முஸ்லிம்களின் நம்பிக்கையை குறைவடையச் செய்திருந்தது. இந்தப்போக்கு துருவமயமாதலில் வெளிப்பட்டதுடன் பெயரளவில் முஸ்லிம்கள் என அடையாளப்படுத்தப்படும் குறிப்பிட்ட சில இளைஞர்கள் வன்முறையை நோக்கி நகர்வதற்கும் வித்திட்டு, இலங்கையின் ஸ்திரத்தன்மையை சவாலுக்குட்படுத்தியது எனலாம்.

முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் முஸ்லிம் இளைஞர்களிடமிருந்து வலுவான பதிலைத் தூண்டியிருக்கும் என்று கோட்பாட்டு ரீதியில் எதிர்பார்க்கப்படுகின்றது. இது முஸ்லிம் இளைஞர்களை தீவிரமயமாக்குவதற்கு தூண்டக்கூடிய காரணியாக இருந்திருக்கலாம். அதாவது இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் வணிக மற்றும் வர்த்தகத்தில் தமது கவனத்தை செலுத்தியிருந்தாலும் சிங்கள கும்பல்களால் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படும் வன்முறைகள், முஸ்லிம் மிதவாதிகள் மற்றும் ஜனநாயக அரசியல் பிரதிநிதித்துவங்களை ஓரங்கட்டுவதன் மூலம் சில முஸ்லிம்களை வன்முறையில் ஈடுபடுத்தியிருக்கக்கூடும் எனக்கூறப்படுகின்றது. இலங்கை தௌஹீத் ஜமாஅத் தலைவர் ஏ.கே. ஹிசாம் (AK. Hisam) ஈஸ்டர் தின தாக்குதல்களின் பின்னணியிலுள்ள சூழ்நிலைகளை ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் வாக்குமூலம் அளித்த போது, "ஏப்ரல் 21 தாக்குதல்களுடன் தொடர்புடைய பயங்கரவாதிகள் பேருவளை மற்றும் திகன சம்பவங்களுக்குப் பிறகு பயங்கரவாதத்தை நாடியிருக்கலாம்" எனக்கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (Imtiyaz, 2019).

இவ்வாறான கருத்துக்களுக்கு மத்தியில் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை எடுத்துநோக்குகின்ற போது அவர்கள் இதுவரை காலமும் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக வன்முறையை கையிலெடுக்காது பொறுமை காத்திருந்த நிலையில் எவ்வாறு இக்கொடுமையான பயங்கரவாத தாக்குதல்களை திடீரென மேற்கொண்டிருக்க முடியும்? என்ற கேள்வி எழுகின்றது. இஸ்லாம் மதம் பொறுமையை கடைபிடியுங்கள் என்று வலியுறுத்துகின்றது. எனவேதான் இஸ்லாமிய கொள்கைகளை ஏற்று அதன்படி தனது வாழ்க்கையை கடைப்பிடிக்கும் முஸ்லிம்கள் வன்முறையை நோக்கி நகர்ந்துள்ளனர் என்று கூறுவதை விட முஸ்லிம் என்ற அடையாளத்தைக் கொண்ட இஸ்லாத்தை தவறாக புரிந்து கொண்ட ஒருசில நபர்களால் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று கூறுவது பொருத்தமானதாக அமைகின்றது.

## 4. கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் இலக்கு வைக்கப்பட்டதன் பின்புலம்

தமிழ் விடுதலைப் புலிகளுடனான உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து சிங்கள கும்பல்களின் முக்கிய இலக்காக முஸ்லிம் சமூகம் இருந்து வருகின்றது. இருப்பினும், ஈஸ்டர் தின தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் சிங்கள கும்பல்களை இலக்குவைக்காது அக்கும்பல்களிடமிருந்து மிரட்டல்களையும் வன்முறைகளையும் எதிர்நோக்கிய கிறிஸ்தவர்களையும் அவர்களது தேவாலயங்களையுமே குறிவைத்துள்ளனர். இலங்கையில் சிறுபான்மையினராகவுள்ள கிறிஸ்தவர்கள் நன்கு ஒருங்கிணைந்த சமூகமாக உள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் தற்கொலை குண்டுதாரிகள் ஏன் கிறிஸ்தவர்களையும் அவர்களது தேவாலயங்களையும் இலக்குவைத்தனர் என்ற கேள்வி எழுகின்றது. எனினும் இந்த கேள்விக்கு உறுதியான பதில்களை கூறுவது கடினம் என்றே கூற வேண்டும். எனினும் சமூக ஊடகங்கள் நியூசிலாந்தின் கிரிஸ்சேர்ச் (Christchurch) மசூதி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு (50 முஸ்லிம்கள் பலியாகினர்) பதிலளிக்கும் முகமாக ஈஸ்டர் தின தாக்குதல்கள் இடம்பெற்றதாக IS சார்பு பதிவுகளை முன்வைக்கின்றன. கிரிஸ்சேர்ச் துப்பாக்கிச்சூடு தான் தாக்குதல்களுக்கு உந்துதல் அளித்தன என்று இலங்கை அரசாங்கமும் முடிவு செய்திருக்கின்றது (De Votta, 2019). ஆனால்

நியூசிலாந்தின் முஸ்லிம் வழிபாட்டாளர்களின் தாக்குதல்களுக்கு இலங்கையுடனோ இலங்கையர்களுடனோ எந்தவொரு தொடர்பும் இருக்கவில்லை. அவ்வாறாயின் தாக்குதல்களுக்கு இலங்கை ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது? என்று ஆராய வேண்டியுள்ளது.

இஸ்லாமிய அரசு அமைப்பு அடிப்படையில் இஸ்லாமிய அடையாளத்தின் மிகக் கடுமையான வடிவத்தைக் கொண்டுள்ளது. உலகம் முழுவதும் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கை கொண்டு செயற்படுகின்றது. இவர்கள் விசுவாசிகள், காபிர்கள் என்ற பிரிவுகளை கடுமையாக வலியுறுத்துகின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் காபிர்களால் முஸ்லிம்கள் மீது நடாத்தப்படும் தாக்குதல் என்பது உலகம் முழுவதும் உள்ள ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதான தாக்குதலாக கணிக்கப்படுகின்றது. இக்கணிப்பு முஸ்லிம்களை இலக்குவைக்கும் காபிர்கள் மீதான தாக்குதல்களை ஊக்குவிக்க வழிவகுக்கின்றது எனக்கூறலாம். இந்த அடிப்படையில் இஸ்லாமிய அரசு மற்றும் அதன் துணை நிறுவனங்களை பொறுத்தவரையில் இலங்கை கிறிஸ்தவர்கள் தாக்கப்படுவதற்கு தகுதியுடையவர்களாவர் (De Votta, 2019) எனத் தோன்றுகின்றது.

உள்ளக அரசியல் அதிகாரப் போராட்டங்கள் மற்றும் பிளவுகள் காரணமாக பாதுகாப்புத் தொடர்பிலான அச்சுறுத்தல் நிலவும் நாடுகளில் இஸ்லாமிய அரசினால் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. அதன்படி, அதிகரித்துவரும் இஸ்லாமியோபோபியாவிற்கும் முஸ்லிம் விரோத தாக்குதல்களால் இலங்கை முஸ்லிம்களின் ஓரங்கட்டலுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தும் இஸ்லாமிய அரசின் முயற்சியாகவும் இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம் (Imtiyaz, 2019). இஸ்லாமிய அரசு அதன் உலகளாவிய பிரச்சாரத்திற்காக உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களை ஈர்த்துள்ளது. இதன்மூலம் அது ஒரு நாடுகடந்த இஸ்லாமிய இயக்கமாக மாறியுள்ளது. எனவே இந்தப் பின்புலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்குதல் களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம் எனக்குறிப்பிடப் படுகின்றது.

## 5. ஈஸ்டர் தின தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள்

ஈஸ்டர் தின தாக்குதல்களைத் தொடர்ந்து முஸ்லிம்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். தாக்குதல்களுக்கு அடுத்த நாள் 20க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அந்த வாரத்தினுள் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மென்மேலும் அதிகரித்தது. இவர்களில் பலர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு, சமூகத்தின் மத்தியில் அவப்பெயரினை சந்திக்க நேர்ந்துள்ளது.

அத்துடன் தாக்குதல்கள் இடம்பெற்று 3 நாட்களின் பின்னர், கைதுசெய்யப்பட்ட சஹ்ரான் ஹாசிமின் வாகன ஓட்டுநர் வழங்கிய வாக்குமூலத்தின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை பிரதேசத்தில் பொலிஸார் சோதனைகளை நடாத்தினர். அதன்போது ஒரு ட்ரோன், வெடிகுண்டு தயாரிக்கும் பொருட்கள், தற்கொலை உடைகள், இஸ்லாமிய அரசுக் கொடி, இஸ்லாமிய அரசு வெளியிட்ட காணொலியில் காட்சிப்படுத்தப்பட்ட குண்டுதாரிகள் அணிந்திருந்த மாதிரியிலான ஆடைகள் என்பன கண்டெடுக்கப்பட்டு அவற்றை தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்தனர். இதற்கிடையே சம்மாந்துறைக்கு வடக்கே 5Km தொலைவில் உள்ள வீடொன்றில் அயலவர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரம் இலங்கை பாதுகாப்புப் பிரிவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது மற்றுமொரு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதில் சஹ்ரான் ஹாசிமின் குடும்பத்தைச் சேர்ந்த 6 குழந்தைகள் உட்பட 15 பேர் பலியாகினர் (Amarasingham, 2019). இத்தாக்குதலுக்கும் இஸ்லாமிய அரசு உரிமை கோரியதுடன் அதற்கு ஆதாரமாக சஹ்ரான் ஹாசிம் தனது சகோதரர் றிழ்வானுடன் நிற்கும் புகைப்படத்தையும் வெளியிட்டனர். இவ்வாறான சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்தின் மீதான ஏனைய சமூகத்தினரின் வெறுப்புப்பேச்சுக்களுக்கு வழிவிட்ட அதேவேளை ஏனைய சமூகத்தவர் மத்தியில் முஸ்லிம்கள் கட்டியெழுப்பியிருந்த நம்பிக்கையினையும் சிதைவடையச் செய்தது.

தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் முஸ்லிம் பெயர் தாங்கிய தீவிரவாதப் போக்குடையவர்கள் என்ற காரணத்தினால் இதுவரை காலமும் முஸ்லிம்களுடன் நல்லுறவு

கொண்டிருந்த ஏனைய சமூகத்தவர்கள் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களாகக் கருதி, அவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. இது பல்லின சமூக கட்டமைப்பைக் கொண்ட நாட்டில் முஸ்லிம்கள் ஏனைய சமூகத்தவருடன் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்தோடும் வாழும் நிலையை பாதித்துள்ளது. குறிப்பாக பாடசாலைகள், வைத்தியசாலைகள், வியாபார நிலையங்கள் போன்ற பொது இடங்களில் இவ்வாறானதொரு நிலை உருவாகியுள்ளதை அவதானிக்கலாம். அத்துடன் முஸ்லிம்களின் கலாசார ஆடைகள் தொடர்பிலும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. புர்கா, நிகாப் போன்ற ஆடைகள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அவற்றை அணிபவர்கள் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற நிலையும் காணப்பட்டது. தாக்குதல்களின் பின்னர் புர்கா அணிந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும் முஸ்லிம்கள் மீது ஏற்படுத்தப்பட்ட தப்பபிப்பிராயம் காரணமாக பல்வேறு போலி குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்படும் போக்கும் அதிகரித்துள்ளது. அதன்படி ‘சுக்கான்’ படம்பொறித்த ஆடை அணிந்திருந்த 47 வயதுடைய அப்துல் ரகீம் மசாகினா என்பவர் தர்ம சக்கரத்தை அணிந்து பௌத்த மதத்தை அவமதித்ததாகக் கூறி கைது செய்யப்பட்டு, 17 நாட்கள் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். இவர் குறித்த காலப்பகுதிகளில் காவலாளிகளால் ‘பயங்கரவாதி’ என சித்திரிக்கப்பட்டிருந்தார் (Fuller & Rizvie, 2019). இது தவறு செய்யாத ஒருவரை தவறு செய்ததாக கூறி அவரை மானவங்கப்படுத்தும் செயலாக அமைகின்றது. இதேபோன்று இக்காலப்பகுதிகளில் ஓரிரு பாடசாலைகளில் ஆசிரியர்கள் அபாயா அணிந்தமைக்காக பாடசாலைகளுக்கு வரக்கூடாது என அச்சுறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதுதவிர முஸ்லிம்களின் நம்பிக்கை மற்றும் மத நடைமுறைகள் என்பன கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளன. இஸ்லாம் தீவிரவாதத்தை ஆதரிக்கின்ற மார்க்கம் என்ற அடிப்படையிலேயே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முஸ்லிம் மதரஸாக்களில் அவற்றுக்கான போதனைகள் வழங்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரு சில தீவிரப்போக்குடைய முஸ்லிம்களின் காட்டு மிராண்டித்தனமான செயற்பாடுகள் ஒட்டுமெத்த முஸ்லிம்களையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளன. இதனடிப்படையில் முஸ்லிம்களின் வீடுகள், வழிபாட்டுத்தலங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன அடிக்கடி சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு முஸ்லிம்கள் நிம்மதி இழந்து அச்சத்துடன் வாழும் நிலை உருவாகியுள்ளது. மேலும் சோதனைகளின் போது சமையலறைகளில் பயன்படுத்தப்படும் கத்தி முதலான உபகரணங்கள் குறித்த கோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டதாகக்கூறி ஊடகங்களில் அவை பூதாகரமாக்கப்பட்டு, முஸ்லிம் சமூகம் குறித்த தப்பபிப்பிராயங்கள் ஏனைய சமூகத்தினர் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் தாக்குதல்களுடன் தொடர்பில்லாத நபர்கள் கூட விசாரணைகளுக்காக அழைக்கப்படுகின்ற நிலையும் உருவாகியிருக்கின்றது. இது முஸ்லிம்களை அவர்களது அந்நிய அயலவர்கள் சந்தேகக்கண்கொண்டு நோக்குவதற்கும் அவர்களை ஓரங்கட்டுவதற்கும் வழிவிட்டுள்ளது.

மேலும் ஈஸ்டர் தின தாக்குதல்களினால் நேரடியாக பாதிப்படைந்த கிறிஸ்தவ சமூகத்தினர் அமைதி காத்த நிலையில் சிங்கள-பௌத்த தீவிரவாத குழுவினர் இத்தாக்குதல்களை காரணங்காட்டி குறுகிய காலப்பகுதியிலேயே முஸ்லிம் சமூகத்தினர் மீது மட்டற்ற வன்முறைச் செயற்பாடுகளை கட்டவிழ்த்து விட்டனர். குறிப்பாக வடமேல் மாகாணத்திற்குட்பட்ட பல்வேறு முஸ்லிம் கிராமங்களிலும், கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொட பிரதேசத்திலும் கடும்போக்காளர்களின் வன்முறைகள் அதிகளவில் இடத்பெற்றன. இவை முஸ்லிம்களின் பள்ளிவாயல்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து நடாத்தப்பட்டிருந்தன. சோதனை என்ற பெயரில் முஸ்லிம் பகுதிகளுக்குள் நுழைந்து அத்துமீறல் செயற்பாடுகளை மேற்கொண்டு வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர் எனவும் வர்த்தகத்தில் சிறந்து விளங்கும் முஸ்லிம்களை பாதிப்படையச் செய்யும் வகையில் இத்தகைய வன்முறைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன்மூலம் முஸ்லிம்கள் உளவியல் ரீதியாக மட்டுமன்றி பொருளாதார ரீதியாகவும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அடியோடு இல்லாதொழிக்கவே திட்டமிட்டு எம்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதாக பாதிக்கப்பட்ட ஒவ்வொரு அப்பாவி முஸ்லிமின் ஆதங்கமும் இருந்தது (பிரியதர்சன், 2019). இதுதவிர பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பல்வேறு எதிர்ப்புப் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தனர். உதாரணமாக "சிங்கள மக்கள் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை பகிஷ்கரியுங்கள், முஸ்லிம்களின் கடைகளுக்கு செல்லாதீர்கள், அந்த கடையில் உண்ணவோ, அருந்தவோ கூடாது" என பௌத்த மதகுரு ஒருவர் கூறியிருந்தமையை குறிப்பிடலாம். இவ்வாறான கூற்றுக்கள் சமய தலைவர்களாலேயே முன்வைக்கப்பட்டுள்ளமை சாதாரண மக்கள் மனங்களில் வேகமாக பதிவானதுடன் அவை செயற்பாட்டு ரீதியான பிரதிபலிப்பினையும் ஏற்படுத்தியிருந்தன. முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகளில் கொள்வனவு செய்வதை பெரும்பான்மை சமூகத்தினர் நிராகரித்தனர். இதன்மூலம் முஸ்லிம்கள் பொருளாதார ரீதியாக நெருக்கடிகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறாக முஸ்லிம்கள் ஈஸ்டர் தின தாக்குதல்களைத் தொடர்ந்து அரசியல், பொருளாதாரம், கலாசாரம் என பல்வேறு அடிப்படைகளில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது பல்வேறு ஆய்வுகளினூடாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

## 6. முடிவுரை

யுத்தத்திற்கு பிந்திய இலங்கையின் முக்கிய போக்குகளில் ஒன்றாக இஸ்லாமோபோபியா (Islamophobia) அடையாளப்படுத்தப்படுகின்றது. அரசியல் ரீதியான ஆதாயம் தேடுகின்றவர்கள் வாக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காகவும் அவர்களின் வாக்குகளை ஒன்றுதிரட்டுவதற்காகவும் சிறுபான்மை எதிர்ப்புப் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். இது வன்முறைக்குழுக்களின் உருவாக்கத்திற்கும் அவர்கள் சிறுபான்மை சமூகங்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிடவும் காரணமாக அமைகின்றது. இதனையே இலங்கையின் கடந்த கால அனுபவங்கள் தெளிவுபடுத்துகின்றன. யுத்தத்தின் பின்னர் பொதுபலசேனா போன்ற தீவிர சிங்கள-பௌத்த குழுவினரின் எழுச்சியும் அவர்களின் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளும் அதிகரித்ததுடன் அவற்றுக்கு இலங்கை அரசின் மறைமுக ஆதரவும் வழங்கப்பட்டிருந்தன. முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போது இலங்கை பாதுகாப்புப் படையினர் தீவிர சிங்கள-பௌத்த கும்பல்களுக்கு எதிராக செயற்படாமல் அமைதி காத்தமையும் முஸ்லிம்களையும் அவர்களது சொத்துக்களையும் சேதப்படுத்திய கும்பல்களை தடுக்காது சில பொலிஸ் அதிகாரிகள் அவர்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தமையும் ஆய்வுகளினூடாக வெளிக்கொணரப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலை பல்லின சமூகக் கட்டமைப்பினைக் கொண்ட இலங்கைக்கு உசிதமானதல்ல; சிறுபான்மை சமூகங்களை வன்முறையை நோக்கி நகர்த்தக்கூடியது. 30வருட கால உள்நாட்டு யுத்தம் அதனையே தெளிவுபடுத்துகின்றது. ஈஸ்டர் தின தாக்குதல்கள் கூட திட்டமிடப்பட்ட அடிப்படையில் முஸ்லிம் பெயர் தாங்கிய குறுகிய எண்ணிக்கையிலான படித்த இளைஞர்களால் நிகழ்த்தப்பட்டமைக்கு இவ்வாறான செயற்பாடுகள் அடிப்படையாக அமைந்திருக்க முடியும். எனவேதான் சமூகங்களுக்கிடையில் பிளவுகளைத் தூண்டும் வன்முறைக்கு வழிவகுக்கும் நபர்களை தண்டிப்பதுடன் அரசும் நடுநிலை வகிக்க வேண்டும். மேலும் தாக்குதல்களின் பின்னர் பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற பெயரில் குறித்த சமூகத்தின் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதற்கு மாறாக அவர்களின் நம்பிக்கை, மத நூல்கள் என்பவற்றை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். ஏனெனில் இவற்றை தவறாக புரிந்து கொள்வதன் விளைவாகவே சிறுபான்மை விரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஈஸ்டர் தின தாக்குதல்களின் பின்னர் உருவாகியுள்ள முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல் லாதவர்களுக்கும் இடையிலான பதட்டத்தை குறைப்பதற்கு முஸ்லிம் சமூகத்தை அவதானித்து, அவற்றின் சொந்த மரபுகள், கொள்கைகள், மற்றும் மதிப்புகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**உசாத்துணைகள்**

Amarasingam, A. (2019). *Terrorism on the teardrop island: Understanding the Easter 2019 Attacks in Sri Lanka.* Retrieved From https://www.academia.edu/39302854/terrorism-on-the-teardrop-island-under-standing-the-easter-2019-attacks-in-srilanka

BBC. (2019). *Sri Lanka attacks: What we know about the Easter Bombings*. Retrieved from https://www.bbc.com/news/world-asia-48010697

BBC. (2014). *Sri Lanka Muslims killed in Aluthgama clashes with Buddhists.* Retrieved from https://www.bbc.com/news/world-asia-27864716

Center for Policy Alternatives. (2015). *Attacks on places of religious worship in post-war Sri Lanka.* Retrieved from http://www.cpalanka.org/attacks-on-places-of-religious-worship-inpost-war-sri-lanka/

Department of Census and Statistics – Sri Lanka. (2007). *Statistical abstract of the Democratic Socialist*

*Republic of Sri Lanka*. Retrieved from http://www.statistics.gov.lk/Abstract_ 2006/abstract2006/table%202007/CHAP%202/AB2–12.pdf

Devotta, N. (2019). *Sri Lanka's Christians and Muslims weren't enemies.* Retrieved from https://foreignpolicy.com/2019/04/25/sri-lankas-christians-and-muslims-werent-enemies/

Fuller, L., & Rizwie, R. (2019). *Muslims 'targeted with arbitrary arrests' after Easter massacre*. Retrieved from https://www.aljazeera.com/indepth/features/muslims-targeted-arbitrary-arrests-easter-massacre-190613123018003.html

Imtiyaz, A.R.M. (2019). *The Easter Sunday Bombings and the crisis facing Sri Lanka's Muslims*. DOI: 10.1177/0021909619868244

Imtiaz, Z., Subedi, D.B., & Sarvananthan, M. (2019). *After the Easter Bombings, Sri Lanka needs effective initiatives for countering violent extremism*. Retrieved from https://www.internationalaffairs.org.au/australianoutlook/after-easter-bombings-sri-lanka-countering-violent-extremism/

Mayilvaganan, M. (2008). *The Muslim factor in the Sri Lankan ethnic conflict.* Retrieved from https://www.tandfonline.com/doi/full/10.1080/09700160802309217?scroll=top&needAccess=true

Mihlar, F. (2019). *Religious change in a minority context: transforming Islam in Sri Lanka*. Retrieved from https://www.tandfonline.com/doi/full/10.1080/01436597.2019.1632186

The Times of India. (2019). *Injured female US official in Sri Lanka Easter Bombing dies*. Retrieved from https://timesofindia.indiatimes.com/world/south-asia/injured-female-us-official-in-sri-lanka-easterbombing-dies/articleshow/69240296.cms

Winsor, M., & Jovanovic, D.W. (2019). *ISIS claims responsibility for Sri Lanka Easter Bombings that killed over 350*. Retrieved from https://abcnews.go.com/International/isis-claims-responsibility-sri-lanka-easterbombings-killed/story?id=62570339